Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ சித்திரை 12 ஆம் நாள் துல்கஃதா 8 (24-4-61) திங்கட்கிழமை இதழ் 60

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

# சாவகச்சேரி சம்பவம்

## இரு சிப்பாய்களுக்கு காயம்

## உயிருக்கு ஆபத்தில்லை

### கோப்பாய் எம். பி. கைதானர்

கொழும்பு, ஏப்ரல் 23

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 21, 22–ம் திகதிகளில் சிறு சம்பவங்கள் ஏற்பட்டதைத் தவிர, பொதுவாக அமைதிநிலவி வருவதாயும், சகல பகுதிகளிலும் நிர்வாகம் வழமையாக நடைபெற்று வருவதாயும் பாதுகாப்பு, வெளிவிவகார பாராளு மன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டார நாயக்கா, அரசாங்க தகவல் பகுதிமூலம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

"கடந்த 21-ம் தேதி இரவு 7-30 க்கு சாவகச்சேரிக் கருகிலுள்ள கைதடியிலும், இரவு 11-30 மணிக்கு சங்கானையிலும் ராணுவத்தின்மீது கடும் கல் வீச்சுக்கள் நடைபெற்றன. சம்பவத்துக்குக் காரணமானவர்கள் கலைக்கப்பட்டனர்.

மிருசுவிலில் தபால்பெட்டி ஒன்றும் இணுவிலில் மாட்டுக் கொட்டில் ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டன.

காங்கேசன்துறை, பருத்தித்துறை ரஸ்தாவில் போடப்பட்டிருந்த தடைகள் அகற்றப்பட்டன.

கடந்த 22-ம் தேதி கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் உட்பட 7 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

திருக்கோணமலைப் பகுதியில் உப்புவெளி, சாம்பல்தீவு ஆகிய இடங்களில் கல்வீச்சுக்கள் நடைபெற்றது. இது சம்பந்தமாய் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரியில் ராணுவத்தின் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததினால் இரு சிப்பாய்களுக்குக் காயம் ஏற்பட்டுள்ளது. அவர்கள். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிருக்கு ஆபத்தில்லை. கைதடியில் இரு கும்பல்களுக்கிடையே ஏற்படவிருந்த கைகலப்புக்களும் கலைக்கப்பட்டது.

21, 22 ம் தேதி சம்பவத்தில் ராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை. உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை. அவசரகாலச்சட்டம் பூரணமாக அமுல் நடத்தப்படுகிறது" என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

## கோவா இந்தியாவின் பகுதி என்பது நிச்சயம்

### ஆபிரிக்க தேசிய தலைவர்கள் மகாநாட்டில் வற்புறுத்தல்

கஸபிளாங்கா, ஏப். 22

போர்ச்சுக்கலின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட அங்கோலா, மெஜாம்பிக், ஸாவோதோம், பிரின்ஸிபிதீவுகள், போர்ச்சுகீஸியகினியா, கோவா முதலிய பிரதேசங்களின் தேசிய தலைவர்களின் மகாநாடு சென்ற 2 நாட்களாக நடைபெற்று இன்று முடிவடைந்தது.

இந்தியாவுடன் சேரவேண்டுமென்று கோவா மக்கள் தெரிவித்துள்ள விருப்பத்தை ஆதரிப்பதாகவும், கோவா இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி என்றும் மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## லாவோஸில் ராணுவ நிலைமை நெருக்கடி

லண்டன், ஏப்ரல் 22

லாவோஸில் ராணுவநிலைமை ஆபத்தாய் இருப்பதாயும், மன்னர் தலைநகரான லுவாங் பிரபாங்குக்கு அபாயம் ஏற்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. வாங்விங் நகர்மீது நடத்தப்பட்ட தாக்குதலை இளவரசரின் துருப்புக்கள் முறியடித்துவிட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாண மாவட்டத்திற்கு செத்தல் மிளகாய் அனுப்ப தடை

### உணவு மந்திரியின் உத்தரவு

கொழும்பு, ஏப்ரல் 23

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட செத்தல் மிளகாயை தீவின் எந்தப்பகுதியிலிருந்தாவது யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அனுப்புதல் ஏற்றிச் செல்லுதல்ஆகியவற்றைத்தடை செய்யும் விசேஷ வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டது. அப்படிச் செய்வதற்கு மாவட்ட நிர்வாக உதவிக் க்ட்டுப்பாட்டு அதிகாரி அல்லது துணை அதிகாரியின் உத்தரவு வேண்டும். கரைச்சி, துணுக்காய் நீங்கலாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இந்த உத்தரவை உண்வுமந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன பிறப்பித்திருக்கிறார்.

## செய்திச் சுருக்கம்

லாவோஸ் இளவரசர் சுவர்ணபூமா இன்றுசௌஎன்லாயை பீகிங்கில் சந்தித்தார். இதே சமயம் அங்கு 2 நாளில் சண்டை நிற்கும் என எதிர்பார்ப்பதாய் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் கூறினர்.

⁂ ⁂ ⁂

வருகிற சனிக்கிழமை லண்டனில் அணு ஆயுத எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

⁂ ⁂ ⁂

இந்தியக் கடற்படைக்குத் தேவையான பெரிய கப்பல்கள், அடுத்த ஆண்டு இந்தியாவிலேயே கட்டப்படும் என திரு. கிருஷ்ணமேனன் கூறினர்.

⁂ ⁂ ⁂

அகில பாரத ஹிந்து மகா சபையின் 46-வது வருடாந்த மகாநாடு குவாலியரில் ஆரம்பமாகியது.

⁂ ⁂ ⁂

வகுப்புவாதக் கட்சிகள், வகுப்புவாதப் பத்திரிகைகள் ஆகியவற்றைத் தடை செய்யுமாறு மத்திய பிரதேஷ காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

⁂ ⁂ ⁂

லாவோஸில் ஏற்பட்ட ஒரு சண்டையில் நேற்று 14 அரசாங்க வீரர்கள் கொல்லப்பட்டனர்.

⁂ ⁂ ⁂

திரு. கென்னடியின் புதிய அமெரிக்கக் கொள்கை உலக நெருக்கடியைத் தீர்க்க வகை செய்துள்ளதென்றும், திரு. கென்னடி அமெரிக்காவின் அதிமுக்கியம் வாய்ந்த ஜனாதிபதி என்றும் திரு. நேரு கூறியுள்ளார்.

⁂ ⁂ ⁂

ஜனாதிபதி கென்னடி நேற்று, தேசிய பந்தோபஸ்து சபையைக் கூட்டி ஆலோசனை செய்தார். அதன்பின் அவர் மாஜி ஜனாதிபதி ஐஸன்ஹோவருடன் பேச்சவார்த்தை நடத்தினர்.

⁂ ⁂ ⁂

ஆபிரிக்காவிலுள்ள வடக்கு அங்கோலாவில் டாம்பா என்னும் கிராமத்தில் நடைபெற்றுள்ள சண்டையில் 30 தெசிய வாதிகள் போர்த்துக்கல் ராணுவத்தாரால் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

⁂ ⁂ ⁂

பெல்ஜியத்திலுள்ள இந்தியத் தூதர் காரியாலயத்தின் முதலாவது காரியதரிசி திரு. கே. சி. நாயர், மேற்கிந்தியத் தீவுகளுக்கும், பிரிட்டிஷ் கயானவுக்கும் பாரதத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

⁂ ⁂ ⁂

ஒரிஸா சட்டசபையின் இரட்டை அங்கத்தினர்கள் தொகுதியை ஒற்றைத் தொகுதியாகப் பிரித்ததைத் தொடர்ந்து அந்த ராஜ்யத்துக்கு 140 ஒற்றை உறுப்புத் தொகுதிகள் ஏற்பட்டிருக்கின்றன. பார்லிமெண்டரி தொகுதிகளின் எண்ணிக்கை 20 ஆகும்.

## கிராம சேவகர்கள் சேவைப் பரீட்சை

கொழும்பு, ஏப்ரல் 23

கிராம சேவகர்கள் சேவைப் பரீட்சை ஒன்று இலங்கையில் விரைவில் நடத்தப்படுமென பரீட்சைக் கமிஷனர் அறிவித்துள்ளார். கிராம விதானைகளுக்குப் பதில் அந்த அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு இவர்கள் நியமிக்கப்படுவார்கள். இப் பரீட்சையில் 3627 பேர் கலந்து கொள்வார்களென்றும், இரண்டு பகுதிகளாக பரீட்சை நடத்தப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட பகுதியில் பதவி வகிக்க விரும்புபவர்கள், அப்பகுதியிலே பிறந்து,வளர்ந்தவர்களாய் இருக்கவேண்டும். அல்லது குறித்த பகுதியில் விண்ணப்பம் செய்வதற்குமுன், 10 வருடங்கள் தொடர்ந்து வசித்தவர்களாய் இருக்க வேண்டும். 45 வயதுக்குட்பட்டவர்கள்,இதற்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பெறத் தகுதி பெற்றவர்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

## அல்ஜீரியாவின் பெரும்பகுதியை கலக ராணுவம் கைப்பற்றியது

### பாரிஸில் குண்டு வீச்சு

### பலர் கைதுசெய்யப்பட்டனர்

அல்ஜிரியர்ஸ், ஏப்ரல் 23

**அல்ஜீரியாவின் பெரும்பகுதியை தாங்சள் கைப்பற்றி விட்டதாய் ராணுவ கலகத்தலைவர்கள் அறிவித்துள்ளனர்; விமானநிலையங்கள் உட்பட டல இடங்கள் வீழ்ச்சியுற்றன என்றும் அல்ஜீரியாவின் இரண்டாவது பெரிய நகரமான ஓரானையும் அவர்கள் கைப்பற்றி விட்டதாயும், இச்செய்தியை பாரிஸ் அரசாங்கமும் ஒத்துக்கொண்டதென்றும் அறிவிக்கப்படுகிறது.**

மணிக்குமணி கிளர்ச்சி வலுத்து வருவதுடன் பல இடங்களுக்கும் அது பரவி வருகிறது. கிளர்ச்சிக்காரர்கள் தரப்பில் மேலும் மேலும் பலர் சேர்ந்து வருகின்றனர். பல ராணுவ அணிகளும் கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்துவிட்டன என்று அறிவிக்கப்படுகிறது. 3 வது பெரியபட்டினமானகான்ஸ்டான்டினையும் அவர்கள் கைப்பற்றிவிட்டார்களாம்.

எவரும் ஆயுதங்களுடன் ரஸ்தாக்களில் நடமாடினல் அவர்கள் ராணுவக் கோட்டில் விசாரணை செய்யப்படுவார்கள் என புரட்சி அரசாங்கம் அறிவித்துள்ளது.

அல்ஜீயர்ஸ், ஓரான் ஆகிய நகரங்கள் ஒரு குண்டுகூட வெடிக்காமல் பிடிபட்டதென்றும், இப்போது அங்கு அமைதி நிலவுவதாயும் அறிவிக்கப்பட்டது. பிரான்ஸ் அல்ஜீரியாவுக்கனுப்பிய புதிய ராணுவத் தலைவரும் தப்பியோடி விட்டாராம்.

ஜெனரல் டிகால் இன்று பல தடவை தனது மந்திரிசபையைக் கூட்டி அவசர ஆலோசனை நடத்தினர். பாரிஸில் ஒரு ஜெனரலும், மற்ளோர் சட்டசபை உறுப்பினரும் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர். பாரிஸில் 3 இடங்களில் குண்டுகள் வெடித்தனவாம்.

## குண்டுவீச்சால் காஸ்டிரோவுக்கு காயம்?

மியாமி, ஏப்ரல் 23

திங்கட்கிழமை குண்டு ஒன்று வெடித்ததன் காரணமாக உடல் அல்லது மனம் பாதிக்கப்பட்டதால் கியூபா பிரதமர் காஸ்டிரோ தன் பணிகளைச் செய்யமுடியாமல் இருக்கிறர் என்று, கியூபா கலகக்காரர்களுடன் நெருங்கிய தொடர்புள்ள வட்டாரம் கூறியது.

## மணிவாக்கு

அடிமைத்தனமாவது பிறருக்கு அடிமையாய் இருத்தல் என்றும் தம்முடைய ஆசைகளுக்கு அடிமையாய் இருத்தல் என்றும் இருவகைப்படும். இந்த அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெறும் இலட்சியத்தைப் பெறுவதற்காகத் தேடும் அறிவே உண்மையான கல்வியாகும்.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு சித்திரை மீ 12 உ (24-4-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## ராஜேந்திரர் அறிவுரை

சர்வோதய மகாநாட்டில் ராஷ்டிரபதி ராஜேந்திரப்பிரசாத் முக்கியமான ஓர் யோசனையைக் கூறினர். பதவி வேட்டையும் அதிகார ஆசையும் நின்ருல்தான் நாட்டுக்கு விமோசன மென்றும், அதிகார ஆசையை அடக்குவதற்கு நாம் அதிகாரத்தை பரவலாக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். அவர் பாரத நாட்டுக்குக் கூறியது, நம் ஈழநாட்டுக்கும் அதிகம் பொருந்தும்.

இலங்கைஅரசியல் சுதந்தரம் பெற்று பல்லாண்டுகளாகியும் நாட்டுக்கு விமோசனம் ஏற்படவில்லை. வேலையில்லாக் கஷ்டங்களும், ஏழ்மையும், வாழ்க்கைச் செலவும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. அரசியல்வாதிகள் பொதுவாக தங்கள் நன்மையையும், தங்கள் கட்சியின் நன்மையையும் கருதி, அகாரத்தைக் கைப்பற்றுவதிலும், பதவி வேட்டையிலும் போட்டி போடுகின்றனரேயன்றி, நாட்டின் பொதுநன்மைக்காக தங்களிடையே விட்டுக்கொடுத்து ஒத்துழைக்க முன்வரக்காணேம். ஒருசிலரது கைகளில் அதிகாரத்தை வைத்திருக்கும் நோக்கத்துடன் தங்கள் கட்சிகளைப் பலப்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாகவுள்ளனர். கட்சிச் சார்பற்ற ஜனநாயகத்தை உருவாக்கினுல்தான் பொது மக்களின் நலன் முன்னேறமுடியுமென்று சர்வோதயத் தலைவர் திரு. ஜயபிரகாசநாராயண் வற்புறுத்துகின்ருர். ஆனல் அவ்வித ஜனநாயகம் இந்தியாவிலேயே ஏற்படமுடியாமல், புதிய புதிய கட்சிகள் தேர்தல் நெருங்க நெருங்கத் தோன்றுகின்றன. அப்படியிருக்க இலங்கையில், கட்சிப் போட்டிகளும், பதவி ஆசைகளும் மறைவது மிகவும் துர்பலம். இங்கு மாருக, கட்சிகளைப் பெருக்கக்கூடிய முறையில் தேர்தல் கட்டுப்பணம் முதலியவற்றில் சலுகைகளும் காட்டப்படுகின்றன.

இந்நிலையில் இலங்கையிலே, ஜனநாயகம் என்று கூறப்படும் இந்த அரசியல்முறை மக்களுக்கு அதிக தீங்கு செய்யாமலிருக்க, ராஜன்பாபு கூறுவது போல், அதிகாரத்தைப் பரவலாக்குவது ஒரு வழி. இன்று தலைமை அரசாங்கத்திலேயே ஒருசிலர் கையில் எல்லா அதிகாரங்களும் குவிந்துள்ளன. இவ்வதிகாரங்களை, பல பல மாகாணங்களுக்கும் பரவச் செய்து, ஆங்காங்கே நிர்வாகம் அங்குள்ள மக்களாலேயே வெகுவாக நடக்கும்படிவிட்டுவிட்டால், ஒவ்வொரு கிராமத்திலும் கிராம ராஜ்யம் நடக்கும்முறையில் அரசியலைத் திருத்திஞல் நாடு விமோசனமடைய சற்றே வழிபிறக்கலாம். பாரத நாட்டைப்போல் இலங்கையும் பல துறைகளில் முன்னேற்றமடைய வேண்டுமென்று விரும்பும் பிரதமர் சிறிமா, மேற்கூறிய முறையில் இங்கு அரசியலைத் திருத்த முயற்சிக்க வேண்டும்.

# மொழிப் பிரச்னையைத்தீர்க்க உடன் ஒரு விசாரணை கமிஷன் வேண்டும்

## தமிழ்ப் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள்

—செனட்டர் எஸ். நடேசன்

"மொழிப் பிரச்சினை" ஏற்பட்ட மற்ற எல்லா நாடுகளிலும், இதுபற்றி விசாரித்து அறிக்கை வெளியிடக் கமிஷன்கள்நியமிக்கப்பட்டுள்ளன. இந்தியா இதற்கு ஓர் உதாரணமாகும்.

ஆனல் துரதிருஷ்டவசமாக இலங்கையிலே இந்தப் பிரச்சினையை 1956-ம் வருடம் முதல் எவ்வித பாரபட்சமற்ற தகுதி வாய்ந்த கமிஷனும் இதைப் பரிசீலனை செய்யவில்லை. இதன் பயனக இப்பிரச்சினை, நெருக்கடியான சூழ்நிலையிலேயே கவனிக்கப்பட்டு வந்துள்ளது. பேராசை பிடித்த அரசியல் வாதிகள் மொழிப் பிரச்சினையை வைத்துக் குதூகலமாக அரசியல் வேட்டையாடுகின்ருர்கள்.

இப்பிரச்சினையைச் சரிவரத் தீர்க்க வேண்டுமானல், முதலில் ஒரு தகுதி வாய்ந்த கமிஷனை நியமித்து, பிரஜைகளின் அடிப்படை உரிமை பற்றியும், தேசிய மொழிகளில் ஒன்ருன தமிழ் மூலம், பிரஜைகள், அரசாங்கத்துடனும் அதைச் சேர்ந்த ஸ்தாபனங்களுடனும் தொடர்பு கொள்ளப் பெற்றுள்ள உரிமைகள் குறித்தும் உடன் பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அப்டிச் செய்தால், உண்மை நிலையைச் சரிவர உணர்ந்து, அதற்கேற்ப இப்பிரச்சினையை நியாயமாகத் தீர்க்க அரசாங்கத்துக்கு வாய்ப்புக் கிடைக்கும்."

என்றிவ்வாறு செனேட்டர் எஸ். நடேசன், நீதிமந்திரி இவ்விஷயமாகப் பத்திரிகையில் வெளியிட்ட ஒரு கட்டுரைக்கு எழுதியுள்ள பதிலில் யோசனை கூறுகின்ருர். அவர் மேலும் கூறுவதாவது:-

இலங்கையைப் போல் பல தேசிய இன மக்கள் வசிக்கும் நாட்டில், அவர்கள் பேசும் பல தேசிய மொழிகளுக்கும் சரிசமமான ஸிவில், அரசியல் உரிமைகள் இருக்குமென்பது ஜனநாயக அரசியலின் அடிப்படைத் தர்மமாகும். இதிலிருந்தே பிரஜைகளின் அடிப்படை உரிமையும் பிறந்தது. சிறுபான்மை தேசிய இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு, பெரும்பான்மை தேசிய இனத்தைச் சேர்ந்தவர் போலவே அரசாங்கத்தைப் பொறுத்தவரை சரிசமமான உரிமை இருக்க வேண்டும்.

பிரஜைகளுக்கும் அரசாங்கத்துக்குமுள்ள உறவில், பிரஜைகளின் உரிமை, கடமை எல்லாம் சட்டபூர்வமானதாகவே இருத்தல் வேண்டும். குறித்த சட்டம் அல்லது விதியைப் பிரஜைகள் தெரிந்து கொள்ளவும் வசதி வேண்டும். சட்டமெல்லாம் தமிழில் இருந்தாலே, தமிழ் மட்டும் தெரிந்த பிரஜைகளுக்கு அது புரிய முடியும்.

### மூன்று மொழி

1956-ம் வருட தேர்தலுக்குப்பின், பண்டாரநாயக்கா மந்திரி சபையில் நீதிமந்திரியாக இருந்த திரு. எம். டபிள்யூ. எச். டி ஸில்வா, பேசுகையில், 1960-ம் வருடத்துப்பின், சட்டமெல்லாம், ஆங்கிலம், சிங்களம், தமிழ் இம் மூன்று மொழிகளிலுமிருக்குமென்பதே தமது சொந்தக் கருத்தென்ருர்.

அரசாங்க மொழிச் சட்டப்படி, சட்டம் தமிழில் இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லையே என்று அவரிடம் சுட்டிக் காட்டியபோது, "நியாயமான தமிழ் உபயோகத்துக்கு வழி செய்ய வேண்டுமென்றும் அதன்படி சட்டங்களும் தமிழில் வெளியிடப்பட வேண்டியிருக்குமென்றும் கூறினர்.

இதிலிருந்து பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் மொழிக் கொள்கை என்ன வென்பது தெளிவாகின்றது.

இரண்டாவதாக, ஒரு சிங்களம் பேசும் பிரஜையைப் போலவே தமிழ் பேசும் பிரஜையும், அரசாங்கக் காரியாலயம் சென்று, தன் அலுவல்களைக் கவனிக்க வேண்டுமாயின், காரியாலய பெயர்ப் பலகைகள், தமிழிலும் எழுதப்பட்டிருக்க வேண்டும். தெருப் பெயர்களும் இரு மொழிகளிலுமிருக்க வேண்டும். சிங்களப் பெயர்களைப் பெரிதாகவும் தமிழ்ப் பெயர்களைச் சிறிதாகவும் எழுதுவது, தமிழரின் கண்பார்வை, சிங்களவருடையதைவிடக் கூர்மையானதென்று அரசாங்கம் கொள்ளுவதாகும். இது சிறுபிள்ளைத்தனமாகும்.

மூன்ருவதாக, அரசாங்க அறிவித்தல்கள், கெஜட்டுகள், நிர்வாக அறிக்கைகள் எல்லாம் தமிழிலும் இருந்தாலே, தமிழ் மட்டும் அறிந்த தமிழ்ப்பிரஜை, அவற்றைப் படித்து, பிரஜைக்குள்ள தனது கடமையைச் சரிவர நிறைவேற்றமுடியும். அறிக்கைகளின் சுருக்கத்தை மட்டும் தமிழில் வெளியிடுவது, இருவித பிரஜைகளுக்கும் வேற்றுமை கற்பித்து, இருவரையும் வெவ்வேறுவிதமாக நடத்துவதாகும்.

பண்டாரநாயக்கா ஆட்சியிலே நீதிமந்திரியாக இருந்தவரைக் கேட்ட போது, அரசாங்க நிர்வாக அறிக்கைகள் மூன்று மொழிகளிலும் இருக்கலாமென்றே தெரிவித்தார். "இவ்விஷயத்தில் நாங்கள் நியாயமாகவே நடப்போம் என்று உறுதி கூறுகிருேம்" என்றும் கூறினர். அனல் இப்போதுள்ள நீதி மந்திரி, இனி நிர்வாக அறிக்கைகள் சிங்களம், ஆங்கிலம் இவ்விரண்டில் மட்டுமே இருக்க வேண்டுமென்றும் தாமே தமிழில் வெளியிட வேண்டாமென்று உத்தரவிட்டதாகவும்தெரிவித்தார். தமிழில் சுருக்கத்தை வெளியிடலாமா? என்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமென்ருர். அப்படி அவர் செய்வது, தமிழ்ப் பிரஜைக்குள்ளஉரிமையைப் பறிப்பதேயாகும். காலஞ் சென்ற பண்டாரநாயக்காவின் நீதி மந்திரியின் மனப்பான்மைக்கும் அவரது மனைவியாரின் நீதிமந்திரியின் போக்குக்கும் எவ்வளவு வேற்றுமை!

நான்காவதாக, பொலிஸ், கஸ்டம்ஸ், தபால், ரயில்வே, ஆஸ்பத்திரி முதலிய இலாகா அதிகாரிகள், தமிழ்ப் பிரஜைகளுக்குச் சேவை செய்ய தமிழ் மொழியையும் அறிந்திருக்க வேண்டும். இன்றேல் அரசாங்கம் தன் செலவில் மொழி பெயர்ப்பாளரை நியமிக்க வேண்டும்.

ஐந்தாவதாக, எல்லா காரியாலயமனுப்பத்திரங்களும்,சிங்களத்தில் மட்டுமன்றி தமிழிலும் இருக்க வேண்டும். அப்போது தான் தமிழ் மட்டும் தெரிந்த பிரஜை, சிங்களப் பிரஜையைப் போல், பத்திரங்களைப் புரிந்து நிரப்ப முடியும். சிங்களம் தெரியாத வீட்டுக்கு, சிங்களத்தில் விலாசமிட்ட கடிதம் வந்தால் அது யாருக்கு வந்ததென்று தெரியாமல், ஒருவருக்கு வந்ததை வேறு யாரும் பிரித்துப் பார்க்கக் கூடும். இதனல் ஏற்படக்கூடிய தொந்தரவுகளை மந்திரி உணரவேண்டும்.

### நீதிமன்ற மொழி

தமிழ்ப் பிரஜைக்குத் தன் மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு வைத்துக் கொள்வது அவரது அடிப்படை உரிமையாயின், நீதி மன்ற பதிவுப் பத்திரங்கள் தமிழிலும இருக்க வேண்டும், தமிழ்ப் பகுதிகளில், வெகுவாக தமிழ் பேசும் மக்களிடையே தான் வழக்குகள் இருக்கும். ஆகவே நீதிமன்ற பத்திரங்கள் தமிழில் இருந்தாலே தமிழ்பிரஜையும் தன் அலுவல்களைப் புரிந்து நடத்த முடியும். அவர் தமது மொழியிலேயே வாக்கு மூலப் பத்திரங்களைப் பெற்ருலே அவர் அப்பீல் செய்து கொள்ளவும் உதவியாக இருக்கும். சிங்களப் பிரஜைகளுக்கு இவ்விஷயமாகவுள்ள வசதிகள், தமிழ்ப் பிரஜைகளுக்கு, தங்கள் பகுதிகளிலாவது இருக்க வேண்டும். கோர்ட் மொழிக்கும், அரசாங்க மொழிக்கும் வேற்றுமையுண்டு.மக்கள் எந்த மொழியில் பேசுகிருர்களோ, அந்தமொழியே கோர்ட் மொழியாக இந்தியாவிலும் இருந்து வருகின்றது.

சிங்களம் அரசாங்க மொழியாக இருப்பதால், வேறு மொழியில், அரசாங்கப் பத்திரங்களை பதிவு செய்வதாயின் அம்மொழியும் அரசாங்க மொழியாகிவிடுமென்றுவாதிப்பது அர்த்தமற்றது. திரு. என். ஈ. வீரசூரியா, இவ் விஷயமாக எழுதியுள்ள ஒரு கட்டுரையில் தீவின் சில பகுதிகளில் ஜனன மரண பதிவு முதலியவை தமிழில் பதிவு செய்ய உரிமையுண்டென்று பெருமையுடன் கூறுகிருர். அவரது அறிக்கைக்கு அரசாங்க அங்கீகாரமும் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஆகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சில குறிப்பிட்ட நிர்வாகக் காரியங்களுக்குத் தமிழைப்பாவிக்க, தமிழ் விசேஷ உபயோகச் சட்டத்தின் 5வது விதி அனுமதிப்பதைக் காணலாம்.

## கியூபா

கியூபா மீது புரட்சிக்காரர்கள் அமெரிக்க உதவியுடன் நடத்திய படையெடுப்பு முறியடிக்கப்பட்டதென்ருலும் இந்தச் சண்டை முடிந்து விட்டதென்று கூறுவதற்கில்லை. தன் எல்லையைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்று காரணம் கூறி, அமெரிக்கா இனி பெரிய இராணுவ நடவடிக்கையை எடுத்துக் கொள்ளலாம் என்று ஹவான செய்தியொன்று கூறுகின்றது. பக்கத்திலுள்ள குவாதிமாலாவில் 8000 கூலித்துருப்புகள் காத்திருக்கின்றனராம். அடுத்த படையெடுப்பு இனி எப்போது என்பதே கேள்வி. மத்திய, தெற்கு அமெரிக்க நாடுகளில் புரட்சிகள், படையெடுப்புகள் நடப்பதும் அரசாங்கங்கள் கவிழ்வதும் சர்வசகஜம். அதற்கு கியூபா விலக்கல்ல.

திரு. கெனடி, அமெரிக்காவின் ஜனதிபதியானதும், அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் புதிய நட்புறவு ஏற்படும் என்று நம்பிக்கை அதிகரித்தது. ஆனல் கியூபா படையெடுப்பால் இந்த நம்பிக்கை பெரிதும் குலைந்ததுடன், பிரிட்டன், இந்தியா முதலிய நாடுகளின் கண்டனத்துக்கும் கூட அமெரிக்கா தன்னை உள்ளாக்கிக் கொண்டுவிட்டது. கியூபாவில் புரட்சிக்காரருக்கு ஏற்பட்ட தோல்வி உண்மையில் அமெரிக்க மதிப்புக்கு ஏற்பட்ட பெரிய தோல்வியாகும். ஆழந்தெரியாமல் அமெரிக்கா காலை விட்டுவிட்டது. இந்தப் போக்கை மாற்ருமல் மேலும் பெரிய படையெடுப்புக்கு அமெரிக்கா ஏற்பாடு செய்யுமாயின், எகிப்தில் சூயஸ் கால்வாய் விஷயமாக பிரிட்டனுக்கு ஏற்பட்ட கதியே அதற்கும் ஏற்படுவதுடன், உலகயுத்தத்தையும் கூட மூட்டி விடுவதாகவும் இருக்கும்.

## ஐயாறன் எழுதுவது

நேற்றுக் காலை இலங்கை வானெலியில் கிறிஸ்தவ நற்சிந்தனை கேட்டேன். அருமையாக இருந்தது.

"நமக்கு எப்போதும் ஏதாவது பயம் இருக்கிறது. தவக்கம், துக்கம் சமாதானக் குறைவு ஏற்படுகிறது. பண பயம், அன்பை இழந்து விடுவோமோ என்ற பயம், வேலை பயம்,பிற்கால வாழ்வைப்பற்றி பயம் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற பயம். இன்னும் எவ்வளவோ பயங்கள்.

இப்பயங்கள் தீரவேண்டுமானல், ஜப வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும், ஜெபமே ஜயம் தருமென்றும் அவர் கூறி, படிப்பில் குறைவாகவுள்ள ஒரு பையனைப் பற்றிக் கதை போல் சொன்னர். படிப்பில், குறைவாகவுள்ள பையன் கடவுளிடம் மன்ருடிக் கேட்டால், அவனுக்கு ஞாபக சக்தியும், அறிவும் அதிகரிக்குமென்றும் எதற்கும் கடவுளிடம் உண்மையாக மன்ருடிக் கேட்க வேண்டுமென்றும் கூறினர்.

* * *

பையனைப்பற்றிக் கதை போல் அவர் ருசிகரமாகக் கூறிவருகையில், திடீரென பேச்சக் 'கட்' ஆகிவிட்டது. ஐந்து நிமிடங்களுக்கு மேலாகிவிட்டதால் வெட்டிவிட்டார்கள் போலும். முன்னர் பல முறையும் இப்படி நற்சிந்தனைகள் நடுவே வெட்டப்படுவதைக் கேட்டிருக்கிறேன். இப்படி வெட்டுவது காலையில் கேட்போருக்கு ஏமாற்றமளிக்கிறது.

முன் கூட்டியே ஒத்திகை வைத்து, நேரத்தைக் கணக்கிட்டு, வாசகத்தைக் குறைக்கச் சொன்னல் இவ்விதம் பாதியில் நற்சிந்தனையை வெட்டிக் கேட்போரைத் திகைக்க செய்ய வேண்டிய அவசியமிராதல்லவா?

* * *

என் நண்பரொருவர் நாம ஜபத்தில் மிகவும் நம்பிக்கையுள்ளவர். தமது மனைவி இறந்ததும் அவரால் துக்கம் தாங்கவில்லை. என்ருலும் மனதுக்குள்ளாகவே பஞ்சாட்சர ஜபம் செய்து கொண்டே இருந்ததால், தம் துக்கம் அடங்கி ஆறுதல் ஏற்பட்டதாயும், எந்த துக்கத்தையும் அடக்க அது பெரிதும் உதவுவதாகவும், கூறினர்.

"கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே"

"நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே"என்ற அருள் வாக்குகள் இச்சமயம் நம்மில் பலருக்கும் பயன்பட வேண்டும்.

"புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி, அறிவு அழிந்திட்டு ஐமேலுந்தி, அலமந்த போது ஆக அஞ்சேல் என்று அருள் செய்வான்..."

—திருஞானசம்பந்தர்

இந்தியாவிலே ஹிந்தியே அரசாங்க மொழியாயினும், ராஜ்யங்களில் அந்தந்த மக்களின் மொழி நிர்வாகக்காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. தமிழை வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகத்துக்குப் பாவிப்பது, மொழிச் சட்டத்துக்கு மாருகாது.

இன்று, எல்லா அரசாங்க இலாகாவிலும் ஆங்கிலம் தாராளமாகப் பாவிக்கப்படுகிறது. தமிழுக்குள்ள சட்ட அந்தஸ்தும், ஆங்கிலத்துக்கு இல்லை. அம் மொழியைப் பாவிப்பது, சிங்கள மொழிச் சட்டத்துக்கு மாருக இல்லாதிருப்பின், ஏன் தமிழ்ப் பிரஜைகளின் மொழியும், சட்ட அங்கீகாரம் பெற்றதுமான தமிழ் மொழியை நிர்வாகத்துக்குப் பாவிப்பதை,

(4-ம் பக்கம் பார்க்க)

அல்ஜீரியா

# பிரெஞ்சு கலகத் தலைவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## பிரான்சில் நெருக்கடி காலச் சட்டம் பிரகடனம்

பாரிஸ், ஏப்ரல் 23

**அல்ஜீயர்ஸில் நேற்று நடைபெற்ற ராணுவக் கலகத்தைத்தொடர்ந்து பிரான்ஸில் நெருக்கடி காலச்சட்டம் பிரகடனம் செய்யப்படுவதாக ஜனதிபதி டிகால் கூறினர். மந்திரிசபையின் விசேஷ கூட்டம் ஒன்றை ஜெனரல் டிகால் நேற்றுக் கூட்டினர்.**

அல்ஜீயர்ஸ் ராணுவக்கலகத் தலைவர்களை "அல்ஜீயர்ஸ்வெறியர்கள்" என பிரான்ஸ் கண்டனம் செய்தது. இந்தக் கலகத்தை அடக்கப் பல நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பட்டிருப்பதாயும், மந்திரிசபையின் விசேஷ கூட்டம் நாட்டில் நெருக்கடிச்சட்டத்தைப் பிரகடனம் செய்ய முடிவுசெய்திருப்பதாயும் டிகால் அறிவித்தார். அல்ஜீயர்ஸிலுள்ள ராணுவத்தினருக்குச் சம்பளம்வழங்க மறுக்கப்படுமென்றும், பாரிசிலிருந்து அல்ஜீயர்ஸுக்கு பணம் அனுப்புவது தடைசெய்யப்படும் என்றும், இருநாட்டுக்குமிடையே வர்த்தகம் நிறுத்தப்படும் என்றும் ஜனதிபதி டிகால் அறிவித்தார். கலகத் தலைவர்கள் ராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவர் என மந்திரிசபை தீர்மானித்திருக்கிறது. அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும்.

அல்ஜீரியாவுக்கான பிரெஞ்சு மந்திரி நேற்று பாரிஸிலிருந்து அல்ஜீயர்ஸுக்கு விரைந்தார். அவருடன் அல்ஜீயர்ஸ் ராணுவத் தலைமைக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரியும் சென்றார்.

பிரான்ஸின் அல்ஜீரிய சுயநிர்ணயக்கொள்கையை எதிர்ப்பவர்கள் எனக்கூறப்படும் 4 ராணுவ அதிகாரிகள் இந்தக் கலகத்துக்குத் தலைமைவகிப்பதாக அறிவிக்கப்பட்டது. கலகக்காரர்கள் அல்ஜீயர்ஸ் ரேடியோ நிலையத்தைக் கைப்பற்றிவிட்டதாயும், அந்நகரத்தின் மற்றும் பல இடங்களையும் பிடித்துவிட்டதாயும் அல்ஜீயர்ஸ் ரேடியோ அறிவித்தது. ஓரான் என்ற இடத்தையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

தற்போது டூனிஸிலிருக்கும் அல்ஜீரிய தேசியத் தலைவர் திரு. பெர்ஹட் அப்பாஸ் டூனிஸ் வானெலி மூலம் பேசும்போது இச்சம்பவத்தைக்கண்டு மக்கள் ஆத்திரம் அடையாமல் ஒழுங்காக நடந்துகொள்ளுமாறும், அமைதியுடனிருக்குமாறும் கேட்டுக்கொண்டிருக்கிறர்.

### பாரிஸில் 40பேர் கைது

அல்ஜீரியாவில் புரட்சி ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து பாரிஸில் 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் பெரும்பாலானேர் முன்பு இராணுவத்தில் கடமையாற்றியவர்கள்.

பிரான்சின் ஓர் விமான நிலையத்தில நேற்றுக்காலை பிளாஸ்டிக்வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். மூவர் காயமடைந்தனர்.

## முதலில் பறந்தவர் ஆஸ்பத்திரியில்?

பாரிஸ்

யூரிககாரினுக்கு முன்னதாகவே ஒரு நபரை ரஷ்யா வானவெளிக்கு அனுப்பிவைத்தது என்றும், அவர் தற்போது மாஸ்கோ ஆஸ்பத்திரி ஒன்றில் பிரக்ஞையற்ற நிலைமையில் இருப்பதாகவும் பிரெஞ்சு டெலிவிஷன் ஸ்தாபனத்தின் விசேஷ நிருபர் தெரிவித்தார்.

இந்த நிருபர் மாஸ்கோவிலிருந்து திரும்பிவந்த கையோடு இவ்வாறு கூறினர்.

காகரினுக்கு முன்னல் அனுப்பி வைக்கப்பட்ட மனிதனின் பெயர் எம். போப்ராவிஸ்கி என்றும், அவர்விமான அமைப்புத்தயாரிப்பாளரின்மகன் என்றும் இந்த நிருபர் கூறினர்

# 'அமெரிக்க நடவடிக்கை காலித்தனமானது'

## கென்னடிக்கு குருஷேவ் கடிதம்

மாஸ்கோ, ஏப்ரல் 23

**கியூபாவில் ஏற்பட்ட தாக்குதலுக்கு அமெரிக்கா தான் திட்டமிட்டது, பணஉதவி அளித்தது என்னும் விஷயம் இப்போது நன்கு நிருபிக்கப்பட்டுவிட்டதென சோவியத் பிரதமர் குருஷேவ், ஜனதிபதி கென்னடிக்கு புதிதாக அனுப்பியுள்ள கடிதமொன்றில் கூறியிருக்கிறர்.**

"ரஷ்யாவைப் பொறுத்தவரை, அது அமெரிக்காவுடன் சமாதானமான உறவுகொண்டிருப்பதையே இன்னும் விரும்புகிறது" என்றும் குருஷேவ் தன் கடிதத்தில் கூறியுள்ளார். ரஷ்யாவின் கடிதத்தை சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோ, மாஸ்கோவிலுள்ள அமெரிக்கப் பிரதிநிதியிடம்கையளித்தார்.

"அமெரிக்காவின் நடவடிக்கை சுத்த காலித்தனத்துக்குச் சமானமானது" என குருஷேவ் கூறியிருக்கிறர். "கியூபா போரில் அமெரிக்கப்படைகளும் தீவிரமாய்க்கலந்துகொண்டன அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைக்கு கியூபாவை ரஷ்யா ஒரு தளமாய்ப் பாவிப்பதாக வாஷிங்டன் தெரிவிக்கும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. படைகுறைப்புப்பற்றி அமெரிக்காவுடன் ஒரு உடன்பாட்டுக்கு வர, ரஷ்யா உண்மையிலேயே விரும்புகிறது" என்றும் குருஷேவ் தம் கடிதத்தில் கூறியுள்ளார். ஜனதிபதி கென்னடிக்கு திரு. குருஷேவ் சொந்தமுறையில் மேற்கண்ட கடிதத்தை அனுப்பியிருக்கிறர்.

# இலங்கை-ஜெர்மன் நேரடி வர்த்தக தொடர்பு ஒப்பந்தம்

கொழும்பு, ஏப்ரல் 23

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும் இலங்கைக்கு மிடையே நேரடி வர்த்தகத் தொடர்புக்கான உடன்பாடு நேற்றுச் செய்துகொள்ளப்பட்டது. இலங்கை வந்துள்ள ஜெர்மன் வர்த்தகத் தூது கோஷ்டித் தலைவரும், வர்த்தக, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சின் சார்பாக திரு. கே. ஆழ்வாப்பிள்ளையும் இவ் வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இது சம்பந்தமான தஸ்தாவேஜுகள் இருநாடுகளுக்குமிடையே பரிமாறிக் கொள்ளப்பட்டன. இருசாராரும் கையெழுத்திட்டுள்ள கூட்டறிக்கையின்படி, இலங்கையில் ஜெர்மன் வர்த்தகத் தொடர்பு ஸ்தாபனம் ஒன்று அமைக்கப்படும். வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள், வசதிகள் ஆகியவற்றை இலங்கை அரசாங்கம் அதற்குச் செய்துகொடுக்கும். ஜெர்மனியில் இலங்கை இதேபோன்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவுமானல் அந்நாடும் அதற்கான உதவிகளைச் செய்யும்.

இலங்கையிலிருந்து தேயிலை, ரப்பர், தென்னம் பொருள், எண்ணைப் பொருட்கள் ஆகியன ஏற்றுமதி செய்யப்படும். நெசவு, கட்டிடம், சுரங்கத் தொழில் ஆகியவற்றுக்கான இயந்திரங்கள், இதரயந்திர வகைகள், மின்சாரப் பொருள் ரஸாயனப் பொருட்கள் ஆகியவற்றை இலங்கை இறக்குமதி செய்யும். இங்கு ஆரம்பிக்கப்படும் ஜெர்மன் வர்த்தக தொடர்பு ஸ்தாபனம் ஆகியவற்றில் இலங்கையரை நியமிக்கும் யோசனைக்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது இலங்கையருக்குத் தொழில் நுட்பப் பயிற்சியளிப்பதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி.
Advt. 91 யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

தெல்லிப்பளை, வீமன்காமம் குறிச்சியில், பிரசித்தியான ஒழுங்கையில், (தெல்லிப்பளை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 1/4 மைல் தூரம்) 9 பரப்பு நிலமும், அதிலமைந்த 3 படுக்கை அறைகளைக் கொண்ட வீடும் தலைவாயிலும் விற்பனைக்கு உண்டு. (இந்த வீட்டில் முன்பு திருமதி வைத்திலிங்கம் பொனே குடியிருந்தார்.) வளவில், மா, பலா, தென்னை முதலியன உண்டு. அத்துடன் மேற்குறித்த காணியை அடுத்து, தென்னை, மாமரங்களைக் கொண்ட 2 பரப்பு நிலமும், அதன் அருகேயுள்ள (10 பரப்பு சொரியல் காணியில் 1/4 பங்கு ஆகிய) 2 1/2 பரப்பு நிலமும் விற்பனைக்கு உண்டு. கீழ்க் காணும் விலாசத்தில் விசாரிக்கவும்:

எஸ். ஆர். செல்வநாயகம்,
கிராண்ட் ஓட்டல்,
பீச் ரோட்,
Advt. 119 யாழ்ப்பாணம்.

### திருமண அழைப்பு

பைனல் கடைச்சல் தொழிற்சாலை அதிபர் எம். எஸ். மூர்த்தி அவர்கட்கும் ரீ. புவனேஸ்வரி அவர்கட்கும் சித்திரை மாதம் 14-ந் திகதி (26-4-61) புதன் கிழமை இரவு 3 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில்திருமணம் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
வி. முத்துவும் பாரியாரும்
சண்டிலிப்பாய் மத்தி.

### தேவை

யாழ்ப்பாணம் "டில்கா ஐஸ் கிரீம் கம்பெனி" யில் உணவு பரிமாறும் 'வெயிட்டர்கள்' தேவை. உடன் விண்ணப்பிக்கவும்.

மனேஜர்,
டில்கா ஐஸ் கிறீம் கம்பெனி,
202, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 585 தந்தி: மன்சூரு

நங்கையர் விரும்பும் அழகிற் சிறந்த நகைகள், வைரங்களுக்கு



சிறந்த ஸ்தாபனம்

கே. என். எம்.
மீருன் சாஹிப்
கன்னதிட்டி யாழ்ப்பாணம்

மொனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM TRADE MARK 1956

மொனரு அன் ரோ பப்படங்கள் மூவர்ண கலர் லேபிளுடன் மயில் - ரோஸ் அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM REGD. TRADE MARK No. 12255 A. M. BUHARI, 255, 5th CROSS ST, COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:
ஏ. எம். புகாரி அன் கோ
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# பதவிவேட்டையும் அதிகார ஆசையுமே பெருந்தீமைகள்

## சர்வோதய மகநாட்டில் ராஷ்டிரபதி ராஜன்பாபு அறிவுரை

சர்வோதயபுரம் ஏப்., 23

இங்கு நடைபெற்ற பதின்மூன்ருவது அகில இந்திய சர்வோதய சம்மேளனத்தில் ராஷ்டிரபதி ராஜேந்திரபிரசாத் பேசுகையில், இன்னும் சில மாதங்களில் தாம் தமது ஜனாதிபதி பதவியைத் துறந்ததும் சர்வோதய சேவையில் ஈடுபடப் போவதாகக் கூறினர்.

5000 பிரதிநிதிகள் உட்பட சுமார் 10,000 பேர் கலந்துகொண்ட சம்மேளனத்தில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:

ஆயுதங்களில் முதன்மைஸ்தானத்தை அடைவதில் நாடுகள் ஒன்றுடனென்று போட்டி போட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் இந்த ஆயுதங்கள் படிப்படியாக குறைக்கப்பட வேண்டுமென்ற உணர்வு அவர்களிடம் ஒரு கட்டத்தில் ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. படைபலக் குறைபபுப்பற்றி ஒவ்வொருவரும் பேசியபோதிலும், யாரும் அவ்விஷயமாக முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. பெரிய நாடுகள் தயக்கம் காட்டுவது எனக்கு ஆச்சரியமாயில்லை. ஆனல், ஆயுதங்களே வைத்திராத நாடுகள் முயற்சி எடுத்துக்கொள்ளத் தயங்குவதுதான் வியப்பாக இருக்கிறது. அஹிம்சையை நடைமுறையில் கடைப்பிடிக்காமல் அதைப்பற்றி நாடுகள் பேசுவதை நிறுத்தவேண்டிய தருணம் வந்துவிட்டது.

அதிகார ஆசையும், பேராசையுமே பைத்தியக்காரத்தனமான ஆயுதப் போட்டிக்குக் காரணமாகும். இந்த ஆசை அடக்கப்பட்டுவிட்டால் இரண்டு தனிநபர்களிடையே அல்லது இரண்டு நாடுகளிடையே காணப்படும் சச்சரவுகள் எல்லாம் நின்றுவிடும். ஆனல் ஆசையை அடக்குவதற்கு நாம் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும். இதுதான் சர்வோதய ஊழியர்களின் நோக்கமுமாகும். அதிகாரத்தைப் பரவலாக்கும் வேலைநாடு முழுவதிலுமுள்ள மக்களுடைய கவனத்தைஈர்த்திருப்பதாகத்தோன்றுகிறது. இந்தவேலையில் பல சங்கடமான பிரச்சினைகளும் முளைக்கின்றன. அதிகாரத்தைப் பரவலாக்குவதுடன் சிலர் கையில் மேலும்மேலும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டு, அதிகாரத்தைப் பரவலாக்கும் நோக்கமே குலைக்கப்படுவதாக ஒரு எண்ணம் நிலவுகிறது.

### அதிகாரக் குவியல்

அதிகாரக் குவியலுக்கு பொதுத்தேர்தல்கள் ஒரு உதாரணமாகும். தங்களுக்கு விருப்பமானவர்களைத் தேர்ந்தெடுக்க மக்களுக்குப் பூரண சுதந்திரம் இருக்கிறது என்பது உண்மையே. ஆனல் அதிகாரம் ஒரு சிலரின் கையில் இருப்பதற்காக, தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் ஒரு குறிப்பிட்ட கட்சி அல்லது கோஷ்டியைச் சேர்ந்தவர்களாக இருப்பதற்காக முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட கட்சியையோ அல்லது தனிப்பட்டவர்களையோ குறித்துப் பேசவில்லை. ஆனல் மக்கள் தங்களிடமே நம்பிக்கையை இழந்துவிட்டனர் என்பது உண்மை. மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் தலைமைக்கு ஆசைப்பட்டால் தவறில்லை. வேறு விதமாக இருந்தால் வாக்காளர்கள் தங்களுடைய உரிமையைக்மிக கவனமாகப் பிரயோகிக்கவேண்டும். மிகத் தகுதியுடையவர்களையேதங்களுடைய பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

பதவி அதிகாரத்துக்கு நடக்கும் சண்டைக்கு முடிவுகட்டிலைல்லாது நாட்டுக்கு விமோசனம் கிடையாது மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் பதவிக்கு ஆசைப்படுவது தவறல்ல. ஆனல், பதவியை அடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் மக்களுக்குச் சேவை செய்வது மோசமாகும். நாட்டுக்குத் தன்னலமற்ற சேவை செய்வதே காந்திஜி கனவு கண்டசுயராஜ்யம் கிடைப்பதை உண்மையாக்கும்.

## மொழிப்பிரச்சினையை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமந்திரி ஆட்சேபிக்கவேண்டும்?

வடக்கிலும் கிழக்கிலும் எல்லா அரசாங்கப் பத்திரங்களும் தமிழிலேயே இருக்க வேண்டுமென்று தமிழர் கேட்பதை இதுவரை அரசாங்கம் ஒப்பவில்லை தான். இம் முக்கிய விஷயத்தைப் பற்றியும், பொதுவாக மொழிப்பிரச்சினையைப் பற்றியும், பிரஜைகளின் அடிப்படை உரிமை பற்றியும் பரிசீலனை செய்ய ஒரு தகுதிவாய்ந்த கமிஷனை நியமித்து, அதன் யோசனைகளை அரசாங்கம் நிறைவேற்றுவதின் மூலம்இப்பிரச்சினைவெகுவாகத் தீரமுடியும்.

## சென்னையில் 7000 கைக்கடிகாரங்கள் பறிமுதல்

சென்னை, சனி

ஆறு இலட்சம் ரூபாய்க்கும் மேலானமதிப்புள்ள கள்ளக்கடத்தல் சரக்குகளை சென்னை சுங்க இலாகா அதிகாரிகள் கைப்பற்றினர்.

சுமார் 7000 கைக்கடிகாரங்கள், மற்றும் பெருந்தொகையான நைலான் பித்தான்கள் ஆகிய இதர சாமான்கள் பிடிபட்டன.

ஜார்ஜ்டவுனிலும் புரசவர்க்கத்திலும் சுங்க அதிகாரிகள் பலசோதனைகள் நடத்தியபின் இப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இது சம்பந்தமாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## கைலாச யாத்திரைக்கு சீன அனுமதி.

கைலாசத்துக்கும் மானஸரோவருக்கும் இவ்வாண்டு யாத்திரீகர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பதாக, லாஸாவிலுள்ள இந்திய ஸ்தானிகருக்கு சீன, வெளிநாட்டு இலாகா அறிவித்துள்ளது' கலகப் படைகள் சில இருப்பதால் யாத்திரீகர் தங்களைத்தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றும் விபுலேக் கனவாய் வழியாகவே திபெத்துக்கு வரவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவுக்குச்செல்ல விசா கேட்டும் வெகுநேரம் காத்திருந்தும் பயனில்லாததாலேயே கனடா கமிஷன் காரியதரிசி திரு.சங்கரப்பிள்ளையை யூகோவாலிபர்சுட்டுக் கொன்றதாகக் கூறப்படுகிறது.

## புதிய சமாதான நீதிபதி

கச்சாய் கிராமச்சங்கத் தலைவர் திரு. அ.த. சிதம்பரப்பிள்ளை சமாதான நீதிபதியாக, சென்ற 18ந்திகதி, சாவகச்சேரி நீதி மன்றத்தில் விசுவாசப் பிரமாணம் எடுதுக் கொண்டார்.

## மே 8-ம் திகதி பாரதத்துக்கு பொது விடுமுறை

புதுடில்லி, ஏப்ரல் 23

மகாகவி தாகூரின் நூற்ருண்டு விழாவை முன்னிட்டு, அடுத்த மாதம் 8-ம் தேதி, சகல கல்வி நிலையங்களும் உள்ளிட்டு, இந்தியா முழுவதும் பொது விடுமுறை அளிக்கப்படும்.

## 'வானவெளிப் பிரயாணம் இராணுவ வெறிதான்'

### டாக்டர் சி. வி. ராமன் கருத்து

பெங்களூர், ஏப் 23

மனித உடலிலுள்ள மிக நுண்ணிய உறுப்பான செவி வேலை செய்யும் முறையைப் பற்றித்தான் இப்பொழுது ஆராய்ச்சி செய்து வருவதாக டாக்டர் சி. வி. ராமன் இங்கு கூறினர்.

இங்குள்ள பிஷப் காட்டன் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் ராமன் விஞ்ஞானப் பிரிவைத் திறந்து வைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'மனித உடலிலுள்ள இந்த நுட்பமான அவயம் வேலை செய்வது மிக ஆச்சரியகரமான விதத்தில் உள்ளதென்றும் அது இயங்குவதைக் கவனிப்பது மிக ஆர்வமூட்டுவதாக உள்ளதென்றும் அவர் கூறினர்.

"விஞ்ஞானத்தின் உண்மையானநோக்கம்" என்றபொருள் பற்றி அவர் பேசுகையில்:-

மனிதன் வானவெளியை வென்ற சாதனையானது ராணுவவெறி தலைவிரித்தாடுவதின் அறிகுறியேயாகும் என்ருர்.

'நம் உலகை சுற்றியுள்ள மர்மங்களையும் புதிர்களையும் விடுவிப்பதே விஞ்ஞான ஆராய்ச்சியின் உண்மையான நோக்கமாக இருக்கவேண்டும். ஆனல் இன்று உலகில் நடைபெறும் விஷயங்கள் கவலையளிக்கும் படியாக உள்ளன. மனிதன் வானவெளிக்குப்போய் பத்திரமாகத் திரும்பியவுடன் உலகம் முழுவதுமே வெறி பிடித்தது போல் ஆகிவிட்டது. மனிதனின் இந்த சாதனை கண்டு, நான் குதூகலமடையவில்லை. அதற்குப்பதில் இந்த சாதனை எனக்கு மிக மனச்சோர்வைத் தான் அளிக்கிறது.

வானவெளியில் அனுப்பப்பட்டது மனிதன, குரங்கா நாயா என்பதில் அதிக வேறுபாடு இல்லை. அது இப்பொழுது பிரச்சினையல்ல. இப்பொழுது முக்கியமானது என்னவென்ருல் இந்தசாதனையின் நோக்கம் என்னவென்பது தான்.

தலைவிரித்தாடும் இராணுவ வெறித்தான் இதன் நோக்கம். வேறு எதுவும் இல்லை. விஞ்ஞானத்தின் நோக்கம் இலட்சியம் இதுவல்ல. நாம் எல்லோரும் இயற்கை அன்னையின் குழந்தைகள் என உணர்பவர்கள் தான் விஞ்ஞானத்தின் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும்' என்று அவர் கூறினர்.

## கலகத் தலைவர் மகன் கைதாம்

மியாமி, ஏப்ரல்21.

கியூபாமீது படையெடுத்த துருப்புகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பிரதமர் காஸ்டிரோ நேரடியாக இருந்து நடத்தி வைத்தார் என்று அரசாங்க ரேடியோ தெரிவித்தது.

கலகக் கவுன்சில் தலைவர் டாக்டர் ஜோஸ்மிரா கார்டோனவின் புதல்வரும், சண்டையின்போது பிடிபட்டவர்களில் ஒருவர் என்று அந்தச் செய்தி கூறியது.

## கவிஞர் இக்பாலுக்கு ஜனதிபதி கெனடி பாராட்டு

வாஷிங்டன்,ஏப்ரல்23

அமெரிக்க ஜனதிபதி கென்னடி,வாஷிங்டனில்நடைபெற்ற இக்பால் தினக் கொண்டாட்டத்திற்கு அனுப்பியசெய்தியில் கவிஞர் இக்பாலின் எண்ணங்களையும் லட்சியங்களையும் பாராட்டியுள்ளார்.

கொழும்பு, ஏப்ரல் 23

இக்பால் தினக் கொண்டாட்டம் இன்று மாலை 4 மணிக்கு ஸகீரா கல்லூரியில் ஆரம்பமாயிற்று. திரு. ஏ. எம். ஏ. அஸீஸ் கொண்டாட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

## கல்லோயா சீனித் தொழிற்சாலை உற்பத்தி அதிகரிக்கும்

அக்கரைப்பற்று, ஞாயிறு

கல்லோயா கரும்புத் தோட்டத்தில் அடுத்த மாத முற்பகுதியில் கரும்பு அறுவடை செய்யப்படவிருக்கிறது. கடந்த வருடத்தைவிட இம்முறை இருமடங்கு சீனி கல்லோயாவில் உற்பத்தி செய்ய முடியுமென்று உயர்தர அதிகாரியொருவர் 'ஈழநாடு' நிருபருக்களித்த பேட்டியின்போது குறிப்பிட்டார்.

இம்முறை சுமார் 1470 ஏக்கர் நிலத்தில் கரும்பு அறுவடை வேலைகள் நடைபெறுமென்றும், அறுவடை வேலைகள் மூன்று பெரும் பிரிவுகளின்கீழ் இயங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும், 650 தொழிலாளர்கள் கடமையாற்றுவார்கள்.

## சுவாமி சச்சிதானந்தா வெளிநாடு பயணம்

கண்டி, ஞாயிறு.

சுவாமி சச்சிதானந்தா இம்மாதம் 21ந் திகதி ஹாங்காங்கிற்குப் பிரயாணமானர். ஜப்பான், பிலிப்பைன், மலாயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்துவிட்டு சுமார் 13 மாதகாலத்தின் பின் அவர் இலங்கை திரும்புவார்.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்–2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருதெனிய.



அழகிய பெனியன்! கால்மேஸ்!!
"லேடன்" தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.
Leyden L.I.L
இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!
அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
"லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.